tamilguru.lk



# அறிவுறுத்தல் பத்திரம்

## கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொருளாதார வசதியற்ற தரம் 1 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவ மாணவிகளுக்காக சனாதிபதி நிதியம் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் - 2024/2025

### தகைமைகள்

- தரம் 01 தொடக்கம் தரம் 05 வரையுள்ள விருப்ப கல்வி அடைவு மட்டம் 50% அல்லது அதற்கு கூடிய மாணவன் /மாணவியாக இருத்தல்.

  தரம் 06 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் தரங்களிலுள்ள, 2023 ஆண்டு நடைபெற்ற இறுதி தவணைப் பரீட்சைக்கேற்ப வகுப்பில் 1-20 வரையான நிலைகளைப் பெற்ற மாணவன் / மாணவியாக இருத்தல்.

  **கவனிக்க:-** 2024 ஆம் ஆண்டு 1 ஆம் தரத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ/மாணவிகள் மற்றும் 2024 ஆண்டு நடைபெறவுள்ள 2023 க.பொ.த.(சா.த.) பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவ/மாணவிகள் இதற்கு விண்ணப்பிக்க முடியாது.

- அரச பாடசாலையொன்றில் கல்வி பயிலும் மாணவன்/மாணவியாக இருத்தல்.

- விண்ணப்பதாரரின் குடும்ப மாதாந்த வருமானம் 100,000.00 ரூபாவிற்கு மேற்படாதிருத்தல்.

### விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்தல் மற்றும் ஒப்படைத்தல்

- விண்ணப்பத்தின் இலக்கம் I ஆம் பகுதி மற்றும் II ஆம் பகுதிகளின் இலக்கம் 01 தொடக்கம் 05 வரையான பகுதிகள் மாணவன்/மாணவியால் பூர்த்திசெய்யப்படல் வேண்டும் என்பதுடன் புள்ளி வழங்குதலும் மாணவ/மாணவியால் மேற்கொள்ளப்படல் வேண்டும். உரிய புள்ளிகள் பாடசாலையின் தெரிவுக்குழு மூலம் பரீட்சிக்கப்பட்டு உறுதிசெய்யப்படல் வேண்டும்.

  **கவனிக்க:- தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்புகளில் உள்ள மாணவ/மாணவியரின் விருப்ப கல்வி அடைவு மட்டத்தின் பிரகாரம் வகுப்பாசிரியர்/ வகுப்பாசிரியையினால் சரியான புள்ளி வழங்கலை மேற்கொள்ளல் வேண்டும்.**

- அனைத்து சந்தர்ப்பங்களிலும் சரியான தகவல்களையே உள்ளடக்குதல் வேண்டும்.

- குறுந் தகவல்களை அனுப்ப முடியுமான தொலைபேசி இலக்கம் ஒன்றைக் குறிப்பிடுதல் வேண்டும். உங்களிடம் அவ்வாறான தொலைபேசி இலக்கம் இல்லையாயின், குடும்பத்தின் நெருங்கிய உறவினர் ஒருவரின் / பாடசாலை ஆசிரியர் ஒருவரின் / அதிபர் அவர்களின் தொலைபேசி இலக்கம் ஒன்றை அவர்களின் இணக்கப்பாட்டுடன் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

- குடும்பத்தின் வருமான நிலைமை தொடர்பாக தாம் வசிக்கும் பிரதேசத்தின் கிராம அலுவலரின் சான்றுரை, பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் (வருமானச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை) **பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை தனது பாடசாலை அதிபரிடம் மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.**

அதிபரால் தமது பாடசாலைக்கு ஆகக்கூடிய புலமைப்பரிசில் பெறுநர்கள் எண்ணிக்கை தெரிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அந்த புலமைப்பரிசில் பெறுநரின் தாய்/தந்தை/பாதுகாவலருடன் கூட்டிணைந்த மாதாந்த புலமைப்பரிசிலை பெற்றுக்கொள்ள கூடிய வகையில் (விசேட இணைந்த கணக்கு) நடைமுறையிலுள்ள கணக்கு ஒன்றை மக்கள் வங்கி, இலங்கை வங்கி அல்லது தேசிய சேமிப்பு வங்கி கிளையில் திறந்து, அக்கணக்கு விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள பக்கம் மற்றும் தாய்/தந்தை/பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் தெளிவான நிழற்படப் பிரதியை அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அந்த நிழற்படப் பிரதிகள் அதிபரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.
கவனிக்க:- எவ்வாறாயினும் அதிபரால் புலமைப்பரிசில் பெறுநர் ஒருவராக தெரிவு செய்யப்படதாக அறிவிக்கப்படும் வரை இணைந்த கணக்கு ஒன்றை திறக்கத் தேவையில்லை.

tamilguru.lk

- **எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விண்ணப்பங்கள் சனாதிபதி அலுவலகத்தில் அல்லது சனாதிபதி நிதியத்தில் நேரடியாக ஒப்படைத்தல் அல்லது தபால் மூலம் அனுப்புதல் ஆகாது.**

**01. புள்ளி வழங்கும் முறை – அனைத்து தரங்களிற்கும்**

**குடும்பம் பற்றிய தகவல்கள்**

**1.** பெற்றோரில் தங்கி வாழும் 21 வயதுக்கு குறைந்த குடும்பத்தில் உள்ள சகோதர சகோதரிகள் எண்ணிக்கை மற்றும் பெற்றோர் பற்றிய விபரம் — புள்ளி

| | | | |
|---|---|---|---|
| 1.1 | மாணவன்/மாணவியுடன் இரண்டு சகோதர சகோதரிகள் இருப்பின் | - | 03 |
| 1.2 | மாணவன்/மாணவியுடன் மூன்று சகோதர சகோதரிகள் இருப்பின் | - | 04 |
| 1.3 | மாணவன்/மாணவியுடன் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட சகோதர சகோதரிகள் இருப்பின் | - | 05 |
| 1.4 | மாணவன்/மாணவி பெற்றோர் இருவரினதும் பாதுகாப்பை இழந்திருத்தல் | - | 10 |
| 1.5 | பெற்றோர்களில் ஒருவரது பாதுகாப்பை இழந்திருத்தல | - | 05 |
| 1.6 | மாணவன் / மாணவி முழுஅளவில் உடல் ரீதியான குறைபாடுடையவர் எனின் **(பகுதியளவில் குறைபாடுடையவர் எனின் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கவும்)** | - | 10 |

(ஆகக்கூடிய புள்ளிகள் 25 )

**கவனிக்க:-** மேலே 1.4 இல் பெற்றோர் இருவரது பாதுகாப்பையும் இழந்திருப்பின் ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படுவதுடன், 1.5 இல் பெற்றோர் இருவருள் ஒருவரது பாதுகாப்பை இழந்திருப்பின் 05 புள்ளிகள் மாத்திரம் வழங்கப்படும்.

பெற்றோரில் தங்கிவாழும் 21 வயதிற்குற்பட்ட திருமணமாகாதவர்கள், சகோதர சகோதரிகளாக கருதப்படுகிறார்கள். உடல் குறைபாடுகள் முழுமையான குறைபாடா அல்லது பகுதியளவிலான உடல் குறைபாடுகளா என்பது தொடர்பில் அரச மருத்துவ உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

**02. மாணவ/ மாணவிகளின் செயற்திறன் அடைவு**

**2.1. தரம் 1 முதல் தரம் 5 வரையான தரங்களிலுள்ள மாணவ/மாணவிகளுக்கு மாத்திரம்.**

**2.1.1.** தரம் 1 முதல் தரம் 5 வரையான தரங்களில் கல்வி கற்கும் மாணவ /மாணவிகள் பெற்றுக்கொண்ட விருப்ப கல்வி அடைவு மட்டம்

| அடைவு மட்டம் | புள்ளிகள் |
|---|---|
| 100% | 50 புள்ளி |
| 75% | 40 புள்ளி |
| 50% | 30 புள்ளி |
| | (ஆகக் கூடிய புள்ளி 50) |

**2.1.2 இணைப்பாடவிதான செயற்பாடுகள்**

பாடசாலை மட்டத்திலான மெய்வல்லுநர் விளையாட்டு/ செஸ்/ நீச்சல்/ ஜிம்னாஸ்டிக்/ கராத்தே/ சுற்றாடல் படையணி/ இசைக்கருவி இசைத்தல்/ பாடல்/ ஓவியம்/ நடனம்/ சாரணர்/ சிறிய நண்பி (குடா மிதுரி) மற்றும் வேறு அனுமதிக்கப்பட்ட இணைப்பாட விதான செயற்பாடுகள்.

| இடம் | பாடசாலை மட்டம் |
|---|---|
| முதலாமிடம் | 08 புள்ளி |
| இரண்டாமிடம் | 07 புள்ளி |
| மூன்றாமிடம் | 06 புள்ளி |

(ஆகக் கூடிய புள்ளிகள் 08)

**கவனிக்க:- மேற்குறிப்பிட்ட 2.1.2 இல், ஒரு மாணவனுக்கு/மாணவிக்கு இணைப்பாட விதான செயற்பாடுகளுக்காக புள்ளிகள் வழங்கும் போது கூட்டு செயற்பாடுகளுக்காகவும் புள்ளிகள் வழங்கப்படும்.**

2.2. <u>தரம் 6 முதல் தரம் 11 வரையான மாணவ/மாணவிகளுக்கு மாத்திரம்</u>.

**2.2.1.மாணவன் மாணவி 2023 ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதி தவணைப் பரீட்சையில் பெற்ற நிலை**

| | |
|---|---|
| 01 ஆம் நிலை முதல் 03 ஆம் நிலை வரை | 50 புள்ளி |
| 04 ஆம் நிலை முதல் 06 ஆம் நிலை வரை | 45 புள்ளி |
| 07 ஆம் நிலை முதல் 10 ஆம் நிலை வரை | 40 புள்ளி |
| 11 ஆம் நிலை முதல் 15 ஆம் நிலை வரை | 35 புள்ளி |
| 16 ஆம் நிலை முதல் 20 ஆம் நிலை வரை | 30 புள்ளி |
| (ஆகக் கூடிய புள்ளிகள் 50) | |

2.2.2. **<u>இணைப்பாடவிதான செயற்பாடுகள்(விளையாட்டு/அழகியல் மற்றும் ஏனையவை)</u>**

பாடசாலை மட்டத்தில் நடைபெறும் தனி/குழு விளையாட்டுகள் மற்றும் மெய்வல்லுநர் போட்டி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் (சங்கங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய) போன்றவை மூலம் பெற்ற வெற்றிகள்

| | பாடசாலை மட்டம் | வலய மட்டம் | மாகாண மட்டம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| முதலாமிடம் | 05 | 06 | 07 | 08 |
| இரண்டாமிடம் | 04 | 05 | 06 | 07 |
| மூன்றாமிடம் | 03 | 04 | 05 | 06 |

(ஆகக் கூடிய புள்ளிகள் 08)

**கவனிக்க:-**

- **ஒரு வருடத்திற்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படுவதன் அடிப்படையில், அண்மித்த 03 வருடங்களை கவனத்திற்கொள்ளுதல் பொருத்தமாகும்.**
- **மேற்குறிப்பிட்ட 2.2.2. இல், ஒரு மாணவனுக்கு/மாணவிக்கு ஒரே இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு தேசிய, மாகாண, வலய மற்றும் பாடசாலை ஆகிய மூன்று மட்டங்களில் தொடர்ந்து 03 வருடங்களிலும் வெற்றி பெற்றிருந்தால் புள்ளிகள் வழங்கும் போது ஆகக்கூடிய புள்ளி மட்டத்தினையே கவனத்திற் கொள்ள வேண்டும்.**

03. **<u>மாணவர் தலைமைத்துவம் - அனைத்து தரங்களிற்கும்</u>**

| | |
|---|---|
| பாடசாலையின் தலைமை மாணவர் தலைவர்/ உப மாணவர் தலைவர் | - 07 புள்ளிகள் |
| மாணவர் தலைவர் (கனிஷ்ட/ சிரேஷ்ட) | - 06 புள்ளிகள் |
| வகுப்புத் தலைவர் | - 05 புள்ளிகள் |

(ஆகக்கூடிய புள்ளிகள் 07)

**கவனிக்க:-** மேலே 03 இல் புள்ளி வழங்கும் போது ஆகக் கூடிய மட்டம் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

04. விண்ணப்பதாரி **அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல். - அனைத்து தரங்களிற்கும் (அறநெறி பாடசாலையின் தலைமை ஆசிரியரால் வழங்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்)**

| | |
|---|---|
| அறநெறிப் பாடசாலைக் கல்வி கற்றல் | 10 புள்ளிகள் |

(ஆகக்கூடிய புள்ளிகள் 10)

(ஒரு வருடத்திற்கும் மேலாக அறநெறிக் கல்வியினை பெறுதல் மற்றும் தற்போதும் அறநெறி பாடசாலையின் மாணவன்/மாணவியாக இருத்தல்.)

அனைத்து பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளும் இதில் உள்ளடங்கும்.

**உங்களுக்கு இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சலுக்கு (Email) செய்தி ஒன்றை அனுப்பி அல்லது கீழே குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி பெற்றுக்கொள்ள முடியும்.**

**மின்னஞ்சல் (Email) :-** pfschol@presidentsoffice.lk

**011 -2 354 354 – உள் இணைப்பு இலக்கம் :- 4830/ 4835/ 4837**

**074 - 085 4527 (WhatsApp மூலம் அனுப்பப்படும் குறுஞ்செய்திகள் மாத்திரம்)**